### அனைத்துக் கட்சிக் கூட்டமும் – தீர்மானமும் வரலாற்றின் வைர வரிகள்!

# தன் செயல் திறன் மூலம் மிக உயரத்திற்குச் சென்றுவிட்டார் முதல்வர்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மார்ச் 8-

சென்னை தலைமைச் செயலகத்தில் 5.3.2025 அன்று நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் அரங்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டமும், நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் - வரலாற்றின் வைர வரிகளாகும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

25 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை அடிப்படையிலான "நாடாளுமன்றத் தொகுதி மறு சீரமைப்பு"த் தொடர்பான அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றினை நமது 'திராவிட மாடல்' அரசின் ஒப்பற்ற முதலமைச்சர் மானமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டினார். காலத்தால் செதுக்கப்பட்ட கல்வெட்டுச் சாசனம்! காலத்தாற் செதுக்கப்பட்ட கல்வெட்டுச் சாசனம் என்றே இதனைக் கூறவேண்டும். வரும் 2026 ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையில், ஒவ்வொரு மாநிலத்திற்கும் எத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று நிர்ணயிக்கப்படும் சட்ட ரீதியான முறை இது.

இதற்கு முன் 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பி னர்களின் எண்ணிக்கை அடிப்படையில் 543 உறுப்பினர்கள் இருக்கின்றனர். தமிழ்நாட்டிற்கு 39 உறுப்பினர்களும் கிடைத்துள்ளனர். 2001 ஆம் ஆண்டில் தொகுதி மறுசீரமைப்பு என்பது 25 ஆண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்டது - பழைய எண்ணிக்கையே தொடர்ந்தது. இப்பொழுது 2026 ஆம் ஆண்டில் மக்கள் தொகை அடிப்படையில் மறுசீரமைப்பின்படி மாநில வாரியாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வரையறை செய்தால், தமிழ்நாடு உள்பட, தென் மாநிலங்களின் உறுப்பினர்கள் எண்ணிக்கை வீழ்ச்சி அடையும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எட்டு இடங்களை இழக்க நேரிடும்.

**கொள்கையை நிறைவேற்றினால் தண்டனையா?**

மக்கள் தொகைக் கட்டுப்பாடு (Family Planing) என்ற தேசியக் கொள்கை செம்மையாக நிறை வேற்றப்பட்டதால், தென் மாநிலங்கள், அதிலும் குறிப்பாக தமிழ்நாடு பெரிதும் பாதிக்கப்படும். நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டிற்கான பிரதிநிதித்துவம் கீழே தள்ளப்படும்; 39 இடங்கள் 31 ஆகக் குறையக் கூடிய நிலைக்கு ஆளாகும்.

**நூறாண்டுக்கு முன்பே "கர்ப்ப ஆட்சி!"**

1928 ஆம் ஆண்டு முதற் கொண்டே கர்ப்பத் தடையின் அவசியத்தை - மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்து வந்தவர் தந்தை பெரியார். "கர்ப்ப ஆட்சி" என்ற நூலையும் வெளியிட்டார். பிள்ளைப் பெறும் இயந்திரமா பெண்கள் என்ற பெண்ணு ரிமைக் கண்ணோட்டத்தில் கருத்துகளைப் பரப்பி வந்தது தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம்.

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் இதில் முதனிலை என்னும் மகுடம் சூட்டிய மாநிலமாக ஜொலித்தது.

"நாம் இருவர் - நமக்கு இருவர்" என்ற மனப்பான்மை மண்ணின் மைந்தர்களின் மனப்பான்மையாகவே மாறிவிட்டது. தமிழ்நாட்டின் வாழ்க்கை வளத்திற்கு, குடும்பங்களின் சீர்மைக்கு இது அடித்தள மாயிற்று.

வெற்றிகரமாக ஒன்றிய அரசின் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கொள்கையை நிறைவேற்றிய காரணத்துக்காக - சாதனைக்காக கேடயம் வழங்குவதற்குப் பதிலாக, ஒன்றிய பி.ஜே.பி. அரசு சாட்டையை எடுத்துத் தமிழ்நாட்டைத் தண்டிக்கிறது. வெற்றி அடைந்தவருக்குத் தோல்விப் பரிசும், தோல்வி அடைந்தவருக்குத் தங்கமெடல் வழங்குவதுதான் - மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்றத் தொகுதி சீரமைப்பு என்ற "தண்டனை" போலும்! என்னே விசித்திரம்!!

ஹிந்தி பேசும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதால், அந்த மாநிலங்களுக்கு நாடாளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் கிடைப்பார்கள். அதாவது ஒன்றிய அரசின் மக்கள் தொகைக் கட்டுப்பாடு என்ற கொள்கையை செயல்படுத்தாததால், அவர்களுக்கு "பம்பர் லாட்டரி!"

**நாட்டை ஆள்பவர்கள் ஹிந்திவாலாக்களா?**

உ.பி., பீகார், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் என்கிற ஹிந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட மாநிலங்களில் வெற்றி பெற்றாலே ஒன்றிய ஆட்சி யைப் பிடித்துவிடலாம். 324 உறுப்பினர்களை அள்ளிக்கொண்டு போவார்கள்.



சுருக்கமாகச் சொன்னால், நாட்டை ஆளக்கூடியவர்கள் "ஹந்திவாலாக்களாகவே" இனி இருப்பார்கள்! இந்த அடிப்படையில்தான் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நாடாளுமன்ற கட்டடத்தில் 848 உறுப்பினர்களுக்கான இருக்கைகளுக்கு வசதிகள்செய்யப்பட்டுள்ளன. தற்போதுள்ள விகிதாசாரப்படி மறுசீரமைப்பு செய்யப்பட்டால், தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக 22 தொகுதிகள் கிடைக்கும். ஆனால், மாறாக புதிதாகக் கொடுக்கப்படும் மக்கள் தொகையின்படி மறு சீரமைப்புச் செய்தால், வெறும் 10 தொகுதிகள் தான் நமக்குக் கிடைக்கும். 12 கூடுதல் தொகுதிகளை இழக்க நேரிடும்.

இது வெறும் எண்ணிக்கையை மட்டும் பொறுத்த பிரச்சினையல்ல; நமது மாநிலத்திற்கான பிரதிநிதித்துவம் சரிந்தால், நமது உரிமைக் குரலின் மென்னி நெரிக்கப்படும். நமக்குக் கிடைக்கவேண்டிய நிதியிலும் கை வைக்கும் நிலை ஏற்படும். தாழ்த்தப்பட்டோர், மகளிர் இட ஒதுக்கீடும் பாதிக்கப்படும்!

தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று ஒதுக்கப்படும் தனித் தொகுதிகளின் எண்ணிக்கையும் 'இளைத்து' விடும். நாடாளுமன்றத்தில் பெண்களுக்காக 33 விழுக்காடு பிரதிநிதித்துவம் கொண்டு வரப்படும் என்று சொல்லப்படுகிறதே, அதிலும் பெண்கள் வஞ்சிக்கப்படுவார்கள்; மாநிலங்களவை உறுப்பினர்க ளின் எண்ணிக்கையும் குறையும்.

இவ்வளவுப் பெரிய - படுபாதாளத்தில் தள்ளப்படும் ஆபத்து - முதலமைச்சரின் வாசகப்படி சொல்ல வேண்டுமானால், "நமது தலைக்குமேல் தொங்குகின்ற கத்தி"யாகும்.

இவ்வளவுப் பெரிய ஆபத்தை - "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்" (435) என்ற குறளோடு ஒப்பு நோக்கவேண்டும்.

ஜனநாயகக் கழுத்துக்கு மேல் தொங்கும் தூக்குக் கயிற்றைத் துண்டித்தார் நமது முதலமைச்சர் இதைத்தான் நமது மானமிகு முதலமைச்சர் இந்தியத் துணைக் கண்டத்திலேயே நுண்மாண் நுழைபுலம் நோக்கி, முதல் குரல் கொடுத்து, முன் கையும் நீட்டி யுள்ளார். அகில இந்திய ஜனநாயகத்தின் கழுத்துக்கு மேல் தொங்கும் தூக்குக் கயிற்றை - முண்டியடித்து ஓடி துண்டித்த பெருமை நமது மானமிகு மாண்புமிகு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களையே சாரும்!

**நன்றியும் – வணக்கமும்!**

இதற்காக ஜனநாயகத்தில் நம்பிக்கையும், எதேச்சதி காரத்துக்கு எதிர்நிலை எண்ணமும் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்து குடிமகன்(ள்) ஒவ்வொருவரும் கம்பீரமாகக் குரல் கொடுத்து நன்றி வணக்க முழக்கமிட வேண்டும்.

இந்த வகையில் இந்தியாவுக்கே வழிகாட்டும் சூரிய வெளிச்சத்தைக் கொடுத்துள்ளார் நமது மானமிகு முதலமைச்சர்.

**நாக்குக்குத் 'தேன் தடவும்' உள்துறை அமைச்சர்**

"உங்கள் மாநிலத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறையாது" என்று நமது நாக்குக்குத் தேன் தடவும் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, ஹிந்தி மாநிலங்களுக்கான எண்ணிக்கை உயரும் என்பதை மறைப்பானேன்?

இதுதான் அவர்களுக்கே உரிய தந்திரமும், சூழ்ச்சியு மாகும். இன்று நேற்று வந்ததல்ல - அவர்களின் இரத்தத்தில் பல்லாண்டு பல்லாண்டு காலமாக ஓடும் பிறவிக் குணமாகும் இது!

**திராவிட சித்தாந்தத்தில் பயிற்சி பெற்றவர்!**

தந்தை பெரியார் வழியில், திராவிட சித்தாந்தத்தில் பயிற்சிச் சிலம்பம் கற்றவராயிற்றே நமது முதலமைச்சர் - அவரிடம் பலிக்குமா இவர்களின் பஞ்ச தந்திரப் பதுங்கல்களும்-பாயச்சல்களும்?

இவற்றையெல்லாம் விட வான் உயரும் சிறப்பு ஒன்று உண்டு. கட்சி அரசியலை இதில் புகுத்தாமல் - தமிழ்நாட்டின் உரிமை நலன் என்ற ஒற்றைப் புள்ளியில் அனைத்துக் கட்சிகளையும் அழைத்து இணைத்துக் காட்டி, ஒரு மனதான தீர்மானத்தை நிறைவேற்றிக் காட்டிவிட்டாரே - இது அரசியல் - சமூக வரலாற்றின் கடைசி நுனிவரை மின்னிக் கொண்டிருக்கும்.

**தனிமைப்படுத்தப்பட்ட பா.ஜ.க. என்னும் பாசிசம்!**

அதைவிட பாசிச பா.ஜ.க.வைத் தனிமைப்படுத்திய வியூகத்தை வெற்றிகரமாக வகுத்து சாதனைப் படைத்தி ருக்கிறாரே - இவரல்லவா அரசியல் விவேகி - வியூகி! அவரது கிரீடத்தின் ஒளிமுத்து இது!

**"நாங்கள் எல்லோரும் ஓரணிதான்!"**

மற்றொன்றை முக்கியமாகச் சுட்டிக்காட்ட வேண்டும். மற்ற எல்லாவற்றிலும் எதிரும் புதிருமாக இருந்த தலைவர்களையும், அமைப்புகளையும், தமிழ்நாட்டுக்கான பொது உரிமை, பொதுப் பிரச்சினை என்று வந்து விட்டால், மற்றவற்றையெல்லாம் மூட்டைக் கட்டி வைத்துவிட்டு, இங்கு நாங்கள் எல்லோரும் ஒரே அணிதான், ஒரே இனம் தான் என எம்மினத் தமிழர்களை நெஞ்சு நிமிர்த்திக் காட்ட வைத்துவிட்டாரே!

குள்ள நரிகள் வாலாட்டிப் பார்க்கவேண்டாம்! இது பெரியார் பிறந்த மண்! திராவிட சித்தாந்த வேரும், நீரும் ஒன்று கலந்த வேளாண்மை மண் - விளையாடிப் பார்க்க வேண்டாம்!

சென்னையில் நேற்று முன்தினம் (5.3.2025) நிறைவேற்றப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத் தீர்மானம் தீர்க்கமாக இந்தியத் துணைக் கண்டத்தின் பார்வையையே கூர்மைப்படுத்தும்.

**துல்லியமான ஏற்பாடுகள்!**

வெறும் தீர்மானமாக மட்டுமல்லாமல், ஆக்கப் பூர்வமாக தமிழ்நாடு மட்டுமல்லாமல், தென் மாநிலங்களிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டு நடவடிக்கைக் குழு அமைக்கப்படும் என்ற முடிவும் - பாசிஸ்டுகளை மிரளச் செய்யும்!

சரியான நேரத்தில், காலம் கருதிக் கூட்டப்பட்ட கூட்டம் - அரசியலுக்கு அப்பாற்பட்டு அனைவரையும் ஒருங்கிணைத்த நேர்த்தி, துல்லியமான ஏற்பாடுகள், வரவேற்பு கள் ஒவ்வொன்றும் 'திராவிட மாடல்' அரசின் செயல்திறனுக்கான தோர் எடுத்துக்காட்டு!

தன் செயல்திறன்மூலம் மிக உயரத்திற்குச் சென்றுவிட்டார் நமது சமூகநீதிக்கான சரித்திர நாயகராம் மானமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகள், பாராட்டுகள்!

ஒன்றிடுவோம்! வென்றிடுவோம்!!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் எஸ்.குணசேகரன் – பாஸ்கரன் – சு.சேகர் – இரா.துரைராஜ் முன்னிலையில்

# வேளச்சேரி மேற்கு மாவட்டப் பிரதிநிதி சி.சூர்யா (எ)மணிவண்ணன் இல்ல மணவிழா வரவேற்பு!

### அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் –தா.மோ.அன்பரசன் – பி.கே.சேகர்பாபு வாழ்த்துகின்றனர்!

சென்னை, மார்ச் 8 -

சென்னை தெற்கு மாவட்டம்- வேளச்சேரி மேற்குப் பகுதி சி.சூர்யா (எ) மணிவண்ணன் - ம.லதா மணிவண்ணன் ஆகியோரின் இல்ல திருமணம் நாளை 9.3.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி அளவில் கோவிலம்பாக்கம் ஸ்ரீ ராணி மகாலில் நடைபெறுகிறது. மணமக்களின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று 8.3.2025 சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்லாசியுடன் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறுகிறது. இதில் மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பாஸ்கரன் எம்.சி., பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர், மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., வேளச்சேரி பெ.மணிமாறன் எம்.சி., வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி., மகேஸ்வரி முருகவேல் எம்.சி., வட்டச் செயலாளர்கள் த.பார்த்திபன், தே.கோபி ஆகியோர் வரவேற்கின்றனர்.

மணமக்களை வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மு.க. தமிழரசு, எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., முனைவர். தமிழச்சிதங்கப்பாண்டின் எம்.பி., இ.எஸ். தரணி வேந்தன் எம்.பி., கனிமொழி சோமு எம்.சி., மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த ரமேஷ், ப.தாயகம்கவி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, காரப்பாக்கம் க.கணபதி, எஸ். அம்பேத்குமார், அசன் மௌலானா, மாநில வர்த்தகர் அணி செயலாளர் காசிமுத்துமாணிக்கம், மாவட்ட நிர்வாகிகள் கே.கே.நகர் தனசேகரன். பாலவாக்கம் க.சோமு. பாலவாக்கம் மு.மனோகரன். பா.வாசுகிபாண்டியன். பா.சாய் ஜெயகாந்தன். எம்.விஜயகுமார். மண்டலக்குழுத் தலைவர்கள், பகுதி கழக செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ண மூர்த்தி. பெருங்குடி எஸ். வி.ரவிச்சந்திரன் . வி.இ.மதியழகன். என்.சந்திரன். நொளம்பூர் வே.ராஜன். துரை கபிலன். கோ.கண்ணன், ப.குணாளன், ஆர்.பி.ரவீந்திரன், மு.ராஜா, ஜி.வெங்கடேசன், துரை வீரமணி, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன். வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன். ரா.பாலசுந்தரம் மேடவாக்கம் ப. ரவி அ.அரிகிருஷ்ணன். அடையார் பி.ஜே.பாஸ்கர், எம்.கே.ஏழு மலை, ஜே. கிருஷ்ண மூர்த்தி ,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், து.அமைப்பாளர்கள். கழக த.ரமேஷ், எஸ்.விநாயக மூர்த்தி, ஆர்.கிருஷ்ண குமார், சைதை சாதிக் , த.ஜெகதீசன் , அடையார் சி.சுரேஷ், சி.பரிமேலழகர், வேளச்சேரி மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் சி.பழனி, எம்.ஏ.சங்கர், பொ.த. எழில் வாணன், சே. மைதிலி மேற்கு, கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் பொ. த.மதிவாணன், கே.என்.தாமோதரன், ஜி.பி.எஸ்.பாலசதிஷ், க. பாரதிதாசன், வி.சக்திவேல், ம.தமிழரசு , வி.எம். டி.ராஜாராமன், பெ.ராஜி, அ.பாண்டியன், க.கணேஷ் குமார், மு.தனசேகர், எஸ். ஜெயமோகன், மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

172 -வது வட்டச் செயலாளர்கள் நேருநகர் எஸ். பாட்சா, 176-வது வட்டச் செயலாளர் எஸ்.முருகவேல் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சென்னை மேற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.விஜயராஜ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு இராயப்பேட்டை, பேகம் சாயிப் தெருவில் உள்ள மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனையில் 01.03.2025 அன்று பிறந்த 10 குழந்தைகளுக்கு 1 கிராம் தங்க மோதிரம் மற்றும் பேபி கிட் ஆகியவற்றை திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் முன்னிலையில் மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு எம்.சி. வழங்கினார். இதில் மாமன்ற உறுப்பினர் கமலா செழியன், ரவி ராஜ்குமார், வட்டச் செயலாளர் க.வே.மோகன், மெய்.சரவணன், அமரேசன், சம்மந்தன், மு.மோகன், வே.சௌந்தர்ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

# பேராசான் நினைவுநாளில் இற்றைமொழிப் போர்களம் வெல்வோம்!



இப்படியும் ஓர்மாந்தர் இருப்பாராமோ?
என்றெண்ணுமாறுநம்மின் பேராசான்தான்
முப்பால்நம் திருக்குறட்குக் எடுத்துக் காட்டாய்
முழுவாழ்வும் வாழ்ந்தஅரும் கொள்கைக்
கோமான்!
எப்படிநாம் எவ்வுவமைகொண்டு போற்றி
இவர்கீடாய்ப் பாடினாலும் ஈடாகாதே!
அப்படிஓர் அருங்குணக்கோ கலைஞர் நெஞ்சில்
ஆழமாகப் பதிந்ததமிழ் நாட்டின் ஆசான்

தந்தைபெரியார்காலம் தொட்டுஅண்ணா
தலைமை தி.மு.கழகத்தின் வளர்ச்சித்தொண்டு
விந்தைபுரிகலைஞரெம்மான் கழகம் தன்னை
வீறுகொண்டுகாப்பாற்றத் தோள்கள் ஈந்து !
சிந்தைவளர் கொள்கைக்கோதளபதிக்கே
திடம்தந்துஉயிர்போலஅன்பின் பண்பு
நந்தவனச் சோலைப்பூந் தென்றலைப்போல்
நாடுதமிழ் ஆள்வினைசேர் பேராசானே!

இன்றுநம்மின் இருமொழிதேர் கொள்கைக் கேதான்
இடர்செய்யும்,ஓரவஞ்சம் மொழிப்பகையை
அன்றுமொழிப் போராட்டம் புரட்சிகண்ட
அடாதஅந்தக் களப்போரில் கலைஞர்தன்னை
வென்றிக்காணார் தனிமைசிறைஅடைத்தபோதில்
வீரமிகும் முழக்கங்கள் அறிஞர் அண்ணா
நின்றபெரும் போராளித் தமிழர் கூட்டம்
நிலைத்த இருமொழிக்கொள்கை காத்தபெம்மான்!

தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறைகள்
தகுதிபெற்றேஉலகரங்கில் தழைத்தேஓங்கும்
நமின்நாட்டின் இருமொழிஅக் கொள்கைகாக்க
இருள்சூழ வருஇந்திமொழிப்பகைமை
உமியாகஊதிவெல்லபெரியார்,அண்ணா
உரிமைக்கோகலைஞர்பேராசான்பாதை
வமின்மக்காள் இன்றுவருமொழிப் போர்க் களத்தில்
வாகைசூடிப் பேராசானின் நினைவாய் வெல்வோம்!



**பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்**
**உலக அமைப்பாளர் – பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்**

---

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், பிப். 8

திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழக அவசரச் செயற்குழுக் கூட்டம் இன்று (08.03.2025 சனிக்கிழமை) மாலை 3 மணி அளவில், சுங்குவார்சத்திரத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் ஜே.சிவபாதம் தலைமை வகிக்கிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா. மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வடக்கு ஒன்றியத்தில் நலத் திட்ட உதவிகள் வழங்குவது குறித்தும், கழகத் தலைவர் நம்முடைய மாவட்டத்திற்கு வருகை தர உள்ளபோது வரவேற்புக்கு பெருந்திரளாக கலந்து கொள்வது மற்றும் (23.03.2025) அன்று பொதுக்கூட்டம் நடத்துவது குறித்தும், (16.3.2025) அன்று நமது ஒன்றியத்தில் சந்தவேலூர் கிராமத்தில் கிரிக்கெட் போட்டி நடத்துவது குறிக்கும் விவாதிக்கப்பட உள்ளது. எனவே இக்கூட்டத்தில் ஒன்றிய, மாவட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி முன்னோடிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ். டி.கருணாநிதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





சைதை மேற்கு பகுதி 139 (அ) வட்டத்தில் வட்டச்செயலாளர். சை. மு. சேகர் தலைமையில் கழகத்தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் வட்டம் முழுவதும் கழகக்கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இதில் எம். எஸ். ஹரிபாபு, டி. என். சிவமணி, சைதை சாதிக், பூபதி. வெங்கடேசன், பி. எஸ். பிரகாஷ் மற்றும் பலர் பங்கேற்றனர்.